சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 73/2023

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ம் நாள் RW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர். திரு.கவிஉதயநிதி நாள் 16.04.2026
த/பெ. கருணாநிதி

வயது. தொழில்

கிராமம். வட்டம்.

**2ம் எதிர்மனுதாரர் சா.1(எ.சா.2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

1. நான் 2ம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் சாட்சியமளிக்க எங்கள் நிறுவனம் அனுமதி கொடுத்தற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்க தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள்

நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், அதனால் எங்கள் நிறுவனம் தான் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. மனுவில் கூறியவாறு தீர்ப்பாக வேண்டுகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.